1981 ஏப்ரல் 28]

தேவாரத்தில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 921—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி தொகுதி தேவாரத்தில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அந்த மருத்துவமனை கட்ட எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இங்கு மருத்துவமனை கட்டுவதற்கான நிலத்தை மருத்துவத் துறைக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் கிடைத்தவுடன் அரசு மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நிலம் கிடைத்த பிறகு மருத்துவமனை கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நிலத்தைப் பெறுவதற்கு என்ன ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அங்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அடிக்கல் நாட்டப்பட்டும் இன்னும் மருத்துவமனை கட்டாமல் இருப்பதால் அங்குள்ள மக்களிடையே ஒரு அதிருப்தி ஏற்பட்டு தப்பு அபிப்பிராயம் கொள்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே உடனடியாக அங்கே மருத்துவமனை கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அண்மையில் மதுரை கலெக்டர் அவர்களுக்கு 2 ஏக்கர் நிலத்தை இலவசமாக மருத்துவ இலாக்காவுக்கு ட்ரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும் என்று நான் எழுதி இருக்கிறேன். அது குறித்து உடனடியாகக் கவனிப்பதாக மதுரை கலெக்டர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே விரைவில் இந்தப் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை கட்டுவதற்கான மதிப்பீடு ஏதாவது அரசு தயாரித்துள்ளதா ? அப்படி மதிப்பீடு செய்யப் பெற்றிருந்தால் எவ்வளவு விரைவில் அது ஆரம்பிக்கப்படும் என்று ஒரு கருத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 28

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது நில ஆர்ஜிதம் செய்யும் கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சுற்றுலாப் பயணிகள் வரும் வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம்.

* வினா எண் 922—திரு. கெ. சொக்கலிங்கம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் இருந்து நமது மாநிலத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள் வண்டிக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான கட்டணம் எவ்வளவு?

(இ) எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ), (ஆ) மற்றும் (இ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63 (6)-ன் கீழ் பிற மாநிலங்களிலிருந்து உரிமம் பெற்றுவரும் பேருந்து களுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கூடுதல் வரி விதிப்பின் காரணத்தினால் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா? திருப்பதி போன்ற வெளிமாநிலங்களி லிருந்து, திருத்தணி, மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இதன் காரணமாக வெகுவாகக் குறைந்திருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வருமா? அதே நேரத்தில், இந்த வரி விதிப்பு சம்பந்தமாக கேரள போக்குவரத்துத் துறை அமைச்சரும், ஆந்திர போக்குவரத்துத் துறை அமைச்சரும், தமிழக போக்குவரத்து அமைச்சரிடம், இந்த வரி விதிப்பைப் பற்றி எதாவது பேச்சு வார்த்தைகள் நடத்தினார்களா? அப்படி நடத்தி யிருந்தால் அதன் முடிவு என்ன? அதைப் போக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நான் பதில் சொல்லும்போதே சொன்னேன் அந்த வரி விதிப்பு ரத்து செய்தாகிவிட்டது என்று சொன்னேன். இரண்டாவதாக, உறுப்பினர் குறிப்